கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,  தேதி: 13.01.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு விருது

அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் சிறந்த மைய விருது (முதல் இடம்) கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை பெற்றுள்ளது. 2024 – 25 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்திற்காக கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை இந்த விருதைப் பெற்றுள்ளது. இவ்விருது ஜோர்ஹாட்டில் உள்ள அசாம் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் 40 ஆவது வருடாந்திர ஆய்வுக்கூடத்தில் வழங்கப்பட்டது.

புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இணை பொது இயக்குனர் ( வேளாண் பொறியியல்), முனைவர் எஸ் என் ஜா அவர்கள், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவுப் பதன்செய் பொறியியல் துறையின் துறைத் தலைவர் மற்றும் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி, முனைவர் மு பாலகிருஷ்ணன் அவர்களுக்கு அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்காகஇந்த விருதை, ஜோர்காட்டில் உள்ள அஸ்ஸாம் வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், முனைவர் பித்யுத் சி தேகா, உதவி பொது இயக்குனர் (பதன்செய் பொறியியல்), முனைவர் கே. நரசையா, லூதியானாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்– மத்திய அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குனர், முனைவர் நச்சிகேத் கோட்வாலிவாலே மற்றும் அறுவடைக்குப் பிந்திய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் ஆர் விஸ்வகர்மா ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி, ஆராய்ச்சி இயக்குனர், முனைவர் எம் ரவீந்திரன் மற்றும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர், முனைவர் ஏ ரவிராஜ் ஆகியோர் உணவு பதன்செய் பொறியியல் துறையின் அர்ப்பணிப்பு, செயல்திறன், மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைப் பாராட்டினர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*